UNIVERSITY OF TORONTO RECEIVED 10-2-1986 PERIODICALS LIBRARY

விலை ரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | தை 28 | ஜ, அவ் 30 | இதழ் 364
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 10-2-1986

அமைச்சர் லலித் கலந்துகொள்ள மறுப்பு

(லண்டன்)

ஒக்ஸ்போர்ட் மாணவர் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப் பட்டு எதிர்வரும் 22-ம் திகதி நடைபெறவிருக்கும் கருத் தரங்கில் முன்அறிவித்தபிர காரம் இலங்கை தேசிய பந் தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி கலந்து கொள்ள மறுப்புத்தெரிவித் துள்ளார்.

'பல்லின நாட்டில் சிங்கள-பௌத்த தேசியவாதம்' என்ற

(5-ம் பக்கம் பார்க்க)

11 இளம் பெண்கள் தொடர்ந்து விசாரணை

[மூதூர்]

மூதூரில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட பதினெரு இளம்பெண்களில், அதிகமா னோர் பாடசாலைகளில் உயர் கல்வி பயிலும் மாணவிகளும்' புனித அந்தோனியார் பாட சாலை அதிகள் முகாமிலிருந் தவர்களும் அடங்குவர் என்று

[5-ம் பக்கம் பார்க்க]

● "இலங்கை இனப்பிரச்னையில் இந்திய மத்தியஸ்தம்

ஆர்வம் இல்லை என கூறட்டும்

அடுத்த முடிவை எடுப்போம்!"

மாலைதீவில் பிரதமர் ராஜீவ்

(மாலே)

"இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு தீர்வுகாண இலங்கை அரசுக்கு உண் மையாகவே அக்கறை இருக்குமானால், மேலும் உறுதியான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க முடியும். இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் நாம் மேற் கொண்டு வரும் மத்தியஸ்த முயற்சிகளில் தனக்கு ஆர்வமில்லை என்று இலங்கை அரசு எமக்குத் தெரிவிக்கும் பட்சத்தில்தான் இப்பிரச்னையைப் பொறுத்து ஏதாவதொரு முடிவை நாம் எடுப்போம்."

தமது மூன்றுநாள் விஜயத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்புமுன்னர் மாலைதீவு தலைநகர் மாலேயில் பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மேற்கண்டவாறு கூறினர்.

இந்திய-மாலைதீவு இரு தரப்பு உறவுகள்பற்றி இந்தியப் பிரத மர் கூறியதாவது:-

"இந்து சமுத்திரத்தில் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய் ந்த ஸ்தலத்தில் மாலைதீவு அமைந்துள்ளது. இந்து-சமுத் திரத்தில் வெளிநாடுகளின் இராணுவப் பிரசன்னம் அதி கரித்துவருகின்ற சூழலிலும், இந்து சமுத்திரத்தைச் சமா தான மண்டலமாக்க இப்பிர தேச நாடுகள் பகீரதப் பிர யத்தனம் செய்துவருகின்ற வேளையிலும் மாலைதீவுடனை உறவுகளை இந்தியா வலுப் படுத்திக்கொள்ள விழைவது இயல்பானதே.

"தவிர, தெற்காசிய பிராந் திய ஒத்துழைப்புச் சங்கத்தி லும் மாலைதீவு ஒரு அங்கத்துவ நாடாக இருக்கும் காரணத்தி னல் இந்தியா அந்நாட்டின் வளர்ச்சியிலும், அதனுடனை ஒத்துழைப்பிலும் இயல்பா கவே கரிசனை காட்டுகிறது".

(5-ம் பக்கம் பார்க்க)

இன்று ஹர்த்தால் இல்லை!

[யாழ்ப்பாணம்)

பெண் கடத்தல் தொடர் பாக இன்று நடைபெற விருந்த ஹர்த்தால் புனித மான பல இயக்கங்களின் வேண்டுதலின்படி ஒத்திவைக் கப்பட்டுள்ளதாக யாழ். நகர் 24 மணி செட்டியார் மஹா ஜன சங்கம் அறிவித்துள் ளது. [மா]

திருக்கேதீஸ்வர மடங்களில் மக்கள் தஞ்சம்

[மன்னார்]

மன்னார் பரப்புக்கடந்தாள், வட்டக்கண்டல் ஆகிய இடங் களிலிருந்து இராணுவத்தாக்கு தல் எதிர்பார்த்து மக்கள் கடந்த இரு தினங்களாகப் பாதுகாப்புக் கருதி இடம் பெயர்ந்து திருக்கேதீஸ்வர மடங்களில் தஞ்சம்புகுந்துள்ள னர்.

இங்கு ஏற்கனவே முல்லைத்

[5-ம் பக்கம் பார்க்க]

சீருடையினர் சுட்டதில் ஒருவர் பலி!

[வவனியா]

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரு வரை நோக்கி சீருடையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய் ததில் ஒருவர் பலியானார் மற் றவர் தப்பியோடி விட்டார்.

நேற்று முன்தினம் நண்பகல் யாழ். வீதி தாண்டிக்குளம் பகுதியில் நிகழ்ந்த இச்சம்ப வத்தில், தேடுதல் முயற்சியை மேற்கொண்டு வந்தவர்களே இவ்வாறு துப்பாக்கிப் பிரயோ கம் செய்துவிட்டுச் சென்ற தாகக் கூறப்படுகிறது.

கிளிநொச்சியில் பிரதான பாலம் தகர்க்கப்பட்டது!

[கிளிநொச்சி]

நேற்று நண்பகல் பதினெரு மணியளவில் கிளிநொச்சியில் கரடிப்போக்குச் சந்திக்குச் சமீ பமாக கண்டி வீதியிலுள்ள பிரதான பாலம் குண்டு வைத்துத்தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து கண்டி வீதிக் கான சகல போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டது

இச்சம்பவத்தைத்தொடர் ந்து கிளிநொச்சி பரந்தன்பகுதி யில் பெரும் பதற்றம் உரு வாகியது.

பாலம் தகர்க்கப்பட்ட இடத்திற்கு இராணுவம் உட னடியாகச் செல்லமுடியாதிருந் ததென்றும், வயல்பகுதிகளில் குண்டுச்சத்தங்கள் கேட்டதா கவும் தெரிவிக்கப்பட்டது

சகல வாகனங்களும் கரடிப் போக்குச் சந்தியில் உருத்திர புரம் பக்கமாக திருப்பப்பட்டு

[5ம் பக்கம் பார்க்க]

மோட்டார் சைக்கிள் கடத்தப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ் ஆஸ்பத்திரி நோயா ளர்களின் ஞானப்பணிகளை ஆற்றிவருபவரும், தொடர் யகத்தில் வசிப்பவருமான அருட்திரு பிரான்ஸீஸ் டானி யல் அடிகளாரின் பாவனையில்

[5ம் பக்கம் பார்க்க]

உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட சடலங்கள்

[வவனியா]

வவனியா-மன்னர் வீதியில் ஆறும் கட்டை என்னும் இடத் தில் துர்நாற்றம் வீசியதைத் தொடர்ந்து மக்களால் மேற் கொள்ளப்பட்ட தேடுதல் முயற்சியில் உருக்குலைந்த நிலை யில் இரு மனித சடலங்கள் நேற்றுமுன் தினம் மீட்கப்பட்ட பின்னர் தகனம்செய்யப்பட் டது.

சடலங்கள் அடையாளங்

[5ம் பக்கம் பார்க்க]

பிரார்த்தனை இயக்கத்தை ஒத்திவைக்கக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

1000 மீட்டர் பாதுகாப்பு வலயத்தையும், இராணுவ முகாம்களையும் வாபஸ்பெறக் கோரி இம்மாதம் 13ம் திகதி நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பிரார்த்தனை இயக்கத்தைப் பிற்போடுவதுடன் போராட்ட வடிவத்தையும் மாற்றியமைக் கச் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு கேட்பது என வட பிரதேச தொழிற்சங் கங்களின் கூட்டுக் குழு நேற் றுத் தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தொழிற் சங்கக் காரியாலயத்தில் திரு. எஸ். விஜயானந்தன் தலைமை

(5-ம் பக்கம் பார்க்க)

வீடு தீக்கிரை!

[வவனியா]

மன்னர்-நெல்லுக்குளம் வீதி யிலுள்ள வீடொன்றை இனந் தெரியாத சிலர் நேற்று முன் தினமிரவு தீக்கிரையாக்கியுள் ளனர்.

புதிய அலுவலக மாற்றம்
மங்களகரமான ஆரம்பவிழா

ஏர்ட் பினான்ஸ் லிமிட்.

எமது நிறுவனம் 10-02-86 பகல் 1-00 மணி முதல் யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக்கோபுர வீதி யில் யாழ்ப்பாணக் கட்டிடப்பொருள் கூட்டுத் தாபனத்துக்கு முன்னாலுள்ள கட்டிடத்திற்கு மாற்றப்படுகின்றது.

சிறந்த முகாமைத்துவத்தின்கீழ், அனுபவமிக்க புதிய நிர்வாகிகளால் நடாத்தப்படும் எமது நிறுவனம்

✶ அடமான நிதி வசதி ✶ சேமிப்பு
✶ நிலையான வைப்பு ✶ அபிவிருத்திக்கடன்
ஆகிய பணிகளை நிறைவேற்றுகின்றது.

ERD FINANCE LTD.,
CLOCKTOWER ROAD, JAFFNA. (A 228)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிவளம்பரம்

விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பீச் ரோட்டில் சகல வசதிகளைக் கொண்ட பெரிய ஸ்தாபனம் குத்தகைக்கும் ஆனைப்பந்தியில் வீடும், வளவும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: துரைரத்தினம், 50, பாரதி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (C 680)

தேக்க மரத்திலான அலுமாரியொன்று விற்பனைக்குண்டு. K. தர்மானந்தன், வாலையம்மன் கோவிலடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (C 682)

Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள் 11-ம் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். தொடர்பு: சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (C 655)

நல்ல நிலையிலுள்ள A 50 கார் கறுப்பு நிறம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: மரியநாயகம் ஸ்ரோர்ஸ், 55, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். C 656

வகுப்புகள்

ஆரும்வகுப்பு முதல்பொதுத் தராதரப் பரீட்சையுட்பட பல்கலைக் கழக, தொழில்நுட்ப மாணவர், தொழிலாளருக்கு ஆங்கிலம் ஆசிரியர் கலாசாலை ஆங்கில விரிவுரையாளர் கற்பிக்கின்றார். பரீட்சைகளுக்கு பாட்டு, வயலின், மிருதங்கம், நடனம். கலா நிலையம், மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டை. (C 611)

A/L 88 ஆரம்பம் 9-2-86 Chemistry திரு. மகாதேவா, Physics-திரு. நந்தகுமார், Zoology - திரு. K சிவபாதம், Botany - திரு. P. ஐங்கரநேசன், Pure maths, App maths- திரு ஆறுமுகம் BOND INSTITUTES ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C-666]

சகலவிதமான தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்) றோனியோ வேலைகளும் ஏற்றுக்கொள்ளப்படும். "TEENS COPY" 514/14, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C 665)

A/L Chemistry - திரு. மகாதேவா, "வெப்ப இராசயனம்" Physics - திரு. நந்தகுமார் "வெப்பவியல்" ஆரம்பம் 9-2-86 BOND INSTITUTES, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், (C-664)

Basic English Mr. K. ஜெயக்குமார் ஆரம்பம் 10-2 86 பி.ப 4-00 BOND INSTITUTES, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (C 663)

சேவை

நீம் சுகாதார தூபம் நுளம்பு இலையான் தொல்லைகளை நீக்கி வீடுகளுக்குப் புனிதத் தன்மையையும் ஆரோக்கியத்தையும் தருகின்றது. ஒரு பைக்கற் -/50 சதம் மட்டுமே. மில்க்வைற், யாழ்ப்பாணம் (C-222)

தேவை

லேத்வேலைக்கு நன்கு அனுபவமுள்ள ஒருவர் தெல்லிப்பழையில் உள்ள தொழிற்சாலைக்கு தேவை. தொழிற்சாலையில் இருந்து 5 மைல் சுற்றாடலில் உள்ளவர் விரும்பத்தக்கது. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் சமுகமளிக்கவும். சம்பளம்:2,000/-வும் அதற்குமேல். தொடர்பு கொள்ளவேண்டிய இடம்: டயானி எலெக்றிக்கல்ஸ். 222, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [C 639]

கயிறு திரிக்கக்கூடிய மிகவும் அனுபவம் உள்ளவர்கள் தொழிலகத்தில் வந்து சந்திக்கவும் தொடர்பு: காக்கை தீவு கயிறு தொழிலகம், அராலி றோட், யாழ்ப்பாணம். [C 646]

மணப்பந்தல்

கத்தோலிக்க வேளாள வெளிநாட்டில் வேலைபார்க்கும் மணமகனுக்கு அதேஇனத்தைச் சேர்ந்த 35 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை விளம்பர இல: C 669 C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம் (C 669)

கண்டெடுக்கப்பட்டது

நல்லையா நகுலானந்தராசாவின் அடையாள அட்டை இலக்கம்: 660112014 V. J. பிறேமானந்தன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது உரிமையாளர், நித்திய கல்யாணி ஜுவெல்லர்ஸ், 165, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும் (C-636)

வட பிராந்திய போக்குவரத்துச்சபை கோண்டாவில் சாலையில் பகிரங்க ஏல விற்பனை

வடபிராந்திய போக்குவரத்துச்பையினால் கழிக்கப்பட்ட செயலிழந்த பஸ் வண்டிகளின் ஏல விற்பனை 1986-02-14ந் திகதி வெள்ளிக்கிழமை பகிரங்க ஏலத்தில் கோண்டாவில் சாலையில். காலை 09-00மணி முதல் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனைக்குரிய பொருட்களை மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 1986ம் ஆண்டு மாசி மாதம் 10ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 13ந் திகதி வியாழக்கிழமை வரை காலை 09-00 மணியிலிருந்து நண்பகல் 12-00மணிவரையும், பிற்பகல் 1-30மணியிலிருந்து மாலை 4-00 மணிவரையும் யாழ். சாலை முகாமையாளருடன்தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

சி. கனகரத்தினம்,
தலைவர்/தகவுடை அதிகாரி,
வடபிராந்திய
போக்குவரத்துச் சபை,
பலாலி வீதி,
கோண்டாவில். A-216

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

மிருசுவில் உசனைச்சேர்ந்த காலம் சென்ற பெரியதம்பி ஐயாத்துரை என்பவரின்மரண சாதனமில்லா மரணச் சொத்தும் உடமைப் பொருட்களிதும் விடயத்தில்

மரணமெய்தியவர்
பெரியதம்பி ஐயாத்துரை
கைம்பெண் கனகேஸ்வரி,
மிருசுவில், உசன்.

விண்ணப்பகாரர்

இல. 200 / ரீ
தத்துவம்

எதிராக

1. ஐயாத்துரை தயாபரன்
2. சந்திரசேகரன் ரவீந்திரனும் பெண்
3, சாந்தினி ரவீந்திரன் பராயமற்றவர்
4. ஐயாத்துரை சிவபரன் பராயமற்றவர்
5. ஐயாத்துரை கமலாதரன் பராயமற்றவர்
6. பெரியதம்பி ஐயாத்துரை மகள் நிமால்நிதி எல்லோரும் மிருசுவில் உசன் (பராயமற்ற 4ம்,5ம்,6ம். எதிர்வாதிகளின்வழக்குக் காவலன் மேற்கூறிய 1ம் எதிர்வாதி)

எதிர்வாதிகள்

பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

மேற்படி வழக்கு மேற்குறிப்பிட்ட இறந்தவரின் மரணச் சொத்து நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள எவரும் 1986ம் ஆண்டு தை மாதம் 7ம் திகதி நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றி அப்பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு மார்கழி மாதம் 20ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
ஆ. குணநாயகம்
பதிவாளர்.

தயாரித்தவர்:
எஸ். கந்தகாமி
ஜே. பி., யு. எம்.
விண்ணப்பகாரரின்
சட்டத்தரணி.

காரணம்காட்ட திகதி 17-2-86க்கு நீடிக்கப்பட்டது.
ஆ. குணநாயகம்
பதிவாளர்
C 653 24-1-86.

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பளை வீமன்காமத்தைச் சேர்ந்த காலம் சென்ற அருளானந்தம் றிச்சாட் இராசையாவின் மரணசாதனச் சொத்து பற்றிய விடயம்.
அருளானந்தம் றிச்சாட் இராசையா மறுபெயர் அருளானந்தம் இராசையா, வீமன்காமம், தெல்லிப்பளை.

- காலம்சென்றவர்

வழ. இல.தத்துவம் / 263

கந்தையா யோசெவ் செல்வநாயகம் பெண் அருள் இராசபத்மநாயகி, வீமன்காமம், தெல்லிப்பளை.

-மனுதார்

எதிர்

கந்தையா யோசெவ் செல்வநாயகம், ஏழாலை வடக்கு, சுன்னாகம்.

- எதிர்மனுதார்

மேற்குறித்த இலக்கம் கொண்ட தத்துவ வழக்கு காலம்சென்ற அருளானந்தம் இராசையாவின் மரணசாதனத்தை நிருபிப்பதற்காக இந்நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்டுள்ளதென்றும், அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை இவ்வழக்கில் பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

இவ்விடயத்தில் அக்கறையுள்ள ஆள் எவரும் மேற்கண்டவாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றான கட்டளை ஆக்கக்கூடாது என்பதற்கு காரணம் ஏதும் இருப்பின் 1986ம் ஆண்டு மாசி மாதம் 19ம் திகதி காலை 9-00 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றிக்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு மார்கழி மாதம் 27ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

V. S. கணேசலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C557)

கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு இல: 1573 — வழக்காளிகள்

1. காரைநகர் பொன்னையா நமசிவாயமும்
2. பெண் இராசம்மாவும்

எதிராக

யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோவில் வீதி இல. 7 (1) பூபாலசிங்கம் கந்தசாமியும் (2) பெண் சுசீலாதேவியும்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்ரிக் கோட்டின் 1573ம் இலக்க ஈட்டு வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனத்தை 1986ம் ஆண்டு பங்குனி மீ 12உ புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அக்காணியில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 54 500/-ம், 21-7-81 தொடக்கம் 20-7-84 வரைக்கும் ரூபா 50,000/- ற்கு வட்டி 30%மும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 12% வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 4752/- சதம் 10-ம்.

ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்ரிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவில்பற்று நல்லூர் இறை கலட்டி வளவும் மறுபிரிவுகளும் நிலப்பரப்பு மூன்று (நில. பர. 3) வீடும் கிணறும் பயிர்வகைகளும். இதற்கெல்லை கிழக்கு கோவில் வீதி, தற்போது றோட்டு, வடக்கு பரஞ்சோதி பெண் வள்ளியம்மை ஆதனம். மேற்கு அருளம்பலம் சிவலிங்கத்தின்ஆதனம். தெற்கு முத்துக்குமாரு விஸ்வேஸ்வரனின் ஆதனம். இதடங்கலும் இதைச் சேர்ந்தவையனைத்தும்.

1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 17ம் திகதி.

அ. ஜெயநாதன்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
16A, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
C 673

"தியாகச்சுடர்" திரைஓவியமானது

(யாழ்ப்பாணம்)

பலதடவை மேடை ஏறிப் பாராட்டுப்பெற்ற "தியாகச்சுடர்" என்னும் ஸ்ரீகிருஷ்ணாலய நாடக மன்றத்தின் மேடை நாடகம் வீடியோ திரைப்படமாகவுள்ளது.

இவ் வீடியோ திரைப்படத்தின் இயக்குநராக ஜீவாநாவுக்கரசனும் தயாரிப்பாளராக கே. கிருஷ்ணராஜாவும் பங்காற்றியுள்ளாகள்.

63-ம் ஆண்டு பூர்த்தி

கரம்பொன் கிழக்கு அம்பவர் வளவு, அன்னப் பிள்ளை சின்னத்தம்பி தம்பதிகளின் மகனும் நாகராசா முத்துலிங்கத்தின் சகோதரரும், மகேஸ்வரி (பிள்ளை) யின் கணவரும், முன்னைநாள் நா. மு. கொம்பனி, பொகவந்தலாவ V. E. A.K Co., அட்டன் செல்லமுத்து சிவநாதன் லிமிட், கொழும்பு ராஜா கோப்பறேசன், யாழ்ப்பாணம் கணேசன் பிடவைக்கடையில் கடமையாற்றியவரும், தற்போது பாலா பன்சி உரிமையாளரும், யாழ்ப்பாணம் S B. S. ஆலோசகருமாகிய பொன்னுத்துரை தனது பெறாமக்கள் பிரேமா, செல்வி, ஜயந்தா, வாகீசன், சுகுணாநிதி, மாப்பாண வூரி பாலசுப்பிரமணியம் குடும்பத்துடன் தனது 63-ம் ஆண்டு பூர்த்தியை கொண்டாடுகின்றார் C-685

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றில்

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பலாலி வீதி, 93ம் இலக்கத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற வீரசிங்கம் உத்தமசிங்கம் பெண் சரோஜினிதேவியின் மரணசாதனமற்ற மரணச் சொத்தின் விடயத்தில்.

— மனுதார்,

வழ. இல. ரி/3943

வீரசிங்கம் உத்தமசிங்கம், 93, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

— எதிர் மனுதார்,

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு பங்குனி மாதம் 14ந் திகதியன்று முற்பகல் 9மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு தை மாதம் 3ந் திகதி.

மன்றின் ஆணைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைதல்:
செ மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி
C-6 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய்க்கப்பல் மீது ஈரான் விமானத்தாக்குதல்

பலியான 4 மாலுமிகள் இந்தியர்களா?

(தெஹ்ரான்)

சைப்பிரஸின் எண்ணெய்த் தாங்கிக் கப்பலொன்றை ஈரானிய யுத்த விமானமொன்று வளைகுடாப் பகுதியில் தாக்கியுள்ளது.

இதன் காரணமாக 4 மாலுமிகள் பலியானார்கள்.

சிலர் காயமடைந்தனர் கப்பலுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

சிறிது கால அமைதிக்குப் பின்னர் வளைகுடாப் பகுதியில் இடம்பெற்ற முதலாவது தாக்குதல் இதுவாகும்.

'எவரெட்' என்ற இந்தக் கப்பல் சைப்பிரஸிற்குச் சொந்தமானது மசகு எண்ணெயை ஏற்றுவதற்கென பாகிஸ்தானிலிருந்து சவூதி அரேபியா நோக்கிச் செல்லும் வழியில் வளைகுடாவுக்குள் நுழைந்த போது ஈரானிய யுத்த விமானங்கள் ஏவுகணைகளைக் கொண்டு தாக்கியதன் காரணமாக கப்பலின் ஒரு பகுதி தீப்பற்றிக் கொண்டது.

இத் தாக்குதலில் இறந்த 4 மாலுமிகளும் இந்தியப் பிரஜைகள் என்று நம்பப் படுகிறது. (து)

ரூபா நாணய அடிப்படையில் இந்திய - சோவியத் வணிகம்

(புதுடில்லி)

இந்திய-சோவியத் வணிகம் ரூபா நாணய முறையில் கணக்கிடப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இணையான வணிக வளர்ச்சிக்கு இது உதவுகின்றதுஎன்று இந்தியப் பத்திரிகையான ''எகனமிக் டைம்ஸ்'' எழுதியுள்ளது.

1953 ல் 1.3 கோடி ரூபாய் அளவில் நடைபெற்ற இந்திய சோவியத் வணிகம், 1985 ல் 4.600 கோடி ரூபாய் அளவுக்கு வளர்ந்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் பிற நாடுகளை விடச் சோவியத்யூனியனுக்கு அதிக அளவில் இந்தியப் பண்டங்கள் ஏற்றுமதியாகின்றன இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 20 சத விகிதமாக அவை உள்ளன. திட்டமிட்ட நீண்ட கால அடிப்படையில் இந்திய- சோவியத் வணிகம் நடை பெறுவதால் இந்தியா தனது ஏற்றுமதிகளை விரிவுபடுத்தவும் பன்முகமாகவும் மேலை நாடுகளின் வணிகத் தடை நடவடிக்கைகளுக்குப் பதிலடி கொடுக்கவும் முடிகிறது.

இந்திய-சோவியத் வணிகம் ரூபாய் அடிப்படையில் நடைபெறுவதால் சோவியத் நாட்டின் நரமான பண்டங்களை இந்தியா பெற முடிவதுடன் மிக மதிப்பு வாய்ந்த நாணயச் செலவாணியைச் சேமிக்கவும் முடிகிறது. சோவியத்யூனியனிடமிருந்து பெறும் மசகு எண்ணெயை மேலை நாடுகளிடமிருந்து இந்தியாவாங்கினால் அதன நாணயச் செலவாணியில் பெரும் பகுதியைச் செலவிட நேரிடும்.

'சலஞ்சர்' கலசத்தின் தேடுதல் பணி கைவிடப்பட்டது!

(வாஷிங்டன்)

விண் வெளிப் பயணத்தின் போது விபத்துக்குள்ளான அமெரிக்க 'சலஞ்சர்' கலசத்தின் பாகங்களைத் தேடும் பணியை அமெரிக்கக் காவல் படையினர் கடந்த வெள்ளி இரவுடன் கைவிட்டனர்.

ஆனால் அமெரிக்க கடற் படையினர் புளோரிடா கரையோரத்தை அடுத்துள்ள ஆழ் கடல் படுக்கையில் விழுந்திருந்திருப்பதாகக் கருதப்படும் 'சலஞ்சர்' விண் வெளிக் கலசத்தின் 2 வதுறொக்கட்டைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபடுவர்.

இந்த முயற்சியை அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த சுழியோடிகள் மேற் கொள்வார்கள்.

2 வது றொக்கட்டில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தீப்பற்றிக் கொண்ட போதே 'சலஞ்சர்' விண் வெளிக் கலசம் விபத்துக்குள்ளானதென்றும் அதிலிருந்த அமெரிக்க உயர்நிலைப் பெண் ஆசிரியை உட்பட 7 பேர் பலியானார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. (பி)

ஐப்பான் செய்மதியின் பயணம் ஒத்திவைப்பு

(டோக்கியோ)

ஜப்பானில் ஒரேநிலையில் விண்வெளியில் மிதக்கவிடப்படவிருந்த அந்த நாட்டின் இரண்டாவது தொலைக்காட்சிச்சேவைக்கான செய்மதியின பயண ம்சீரற்றவானிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்போது விண்வெயில் ஒரே நிலையில்மிதந்து கொண்டிருக்கும் தொலைக்காட்சி செய்மத் தொழில்நுட்பக்கோளாறு காரணமாகச் செயலிழந்துள்ளது. இதற்குப் பதிலாகவே இரண்டாவது தொலைக்காட்சிசெய்மதி ஒருகட்டமாக விண்வெளியில் அனுப்பிவைக்கப்படவிருந்தது இந்த செய்மதி ஜப்பானுக்கு மேலாக 36,000 கிலோ மீற்றர் தொலைவில் ஒரே நிலையில் மிதக்கவிடப்பட்டது.

ரயில்விபத்து 40 பேர் பலி

[ஒட்டாவா]

கனடாவின் பிரதானபாதையில் நேற்று அதிகாலை பிரயாணிகள் ரயிலும், சரக்கு ரயில் வண்டியும் மோதிக்கொண்டதில் குறைந்தது 40 பேர் பலியானார்கள் 80 பேர்காயமடைந்தனர்.

எட்டன்சன் என்ற இடத்திற்கு தெற்கே சுமார் 160 மைல் தூரத்தில் இந்த ரயில் விபத்து இடம்பெற்றது. (து)

50 வாகன மோதலில் ஆறுபேர் காயம்

(லண்டன்)

இங்கிலந்திலுள்ள துறைமுக நகரமான டோரில் உள்ள ஒரு பெரும் சாலையில் ஐம்பதிற்கும் மேலான வாகனங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்ட போது ஆறுபேர் காயமடைந்தனர்.

இந்த விபத்து காரணமாக கென்ட் நகரில் நெருக்கடி ஏற்பட்ட. அந்த நெடுஞ்சாலை பனிகட்டிபோல் வழுவழுப்பாக விருந்ததே விபத்துக்கான காரணமாகும் எனத்தெரிவிக்கப்பட்டது. (பி)

தாயகம் திரும்பியோர் கோரிக்கை

[சென்னை

இலங்கையின் வடக்குக்கிழக்கில் வாழும் தமிழர்களும், மலைநாட்டில் வாழும் தமிழர்களும் வன்முறைக்காளாக்கப்படுவதைத்தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணி, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியையும், தமிழக முதல்வர் திரு. எம். ஜி இராமச் சந்திரனையும் கேட்டுக்கொண்டுள்ளது. [செ]

''பிராந்திய ஒத்துழைப்பு அவசியம்''

(மாலே)

தெற்காசிய நாடுகள் தங்களது மக்களை பிராந்திய ஒத்துழைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்ய வேண்டுமென்றுஇந்தியப்பிரதமர் திரு. ராஜீவ்காந்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாலைதீவுக்கு விஜயம் மேற்கொண்ட திரு. ராஜீவ் காந்திக்கு அங்குள்ள நகரசபை யொன்று வரவேற்பளித்துக் கௌரவித்தது. இவ்வைபவத்தில் காலந்து கொண்டு உரையாற்றிய பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

லிபியா விமான விவகாரம்:

ஐ. நா. தீர்மானம்: அமெரிக்க 'வீட்டோ'

(திருப்பொலி)

லிபிய வமான மொன்றை இஸ்ரேல் பலவந்தமாக இறக்கியதற்குக் கண்டனம் தெரிவிக்கும் ஐ.நா பாதுகாப்புச் சபை தீர்மானமொன்றுக்கு எதிராக அமெரிக்கா அதன் 'வீட்டோ' ரத்து திகாரத்தைப் பயன்படுத்தியுள்ளது.

இந்த விவகாரத்தை சிரியா ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையில் சமர்பித்திருந்தது தீர்மானத்திற்கு ஆதரவாக பத்து நாடுகள் வாக்களித்திருந்தன. நான்கு நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

அமெரிக்கா அதன் 'வீட்டோ' அதிகராத்தைப் பயன்படுத்துகையில் இஸ்ரேல் இந்த நடவடிக்கையைக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளது.

முக்கியமான காலகட்டத்தில் இந்த நடவடிக்கையை மேற்கொள்வது ஐக்கியநாடுகள் சாசனத்தின் தற்பாதுகாப்பு சம்பந்தமான பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தெளிவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

திரிப்பொலியில் லிபியா அதிபர் கேர்ணல் கடாபி பத்திரிகையாளர் மத்தியில் பேசும் போது; தரைக்கடலின் மேலாகச் செல்லும் அமெரிக்க, இஸ்ரேல் விமானங்களை தடுத்து நிறுத்தும்படி தான் தமது விமானப்படைக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளின் விமானங்களும் லிபியாவில் இறக்கப்படும் என்றும் பிரயாணிகள் அனைவரும் தனித்தனியாக சோதனைக்குட்படுத்தப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். [து]

''எனது மனைவியையும் மூத்த மகளையும் வெட்டிக்கொன்றார்கள்!''

நோட்டன்பிறிட்ஜ்கந்தசாமி திடுக்கிடும்தகவல்

(கா. யோகநாதன்)

''எனது எட்டு வயது மகளை முதுகிலே சுமந்து கொண்டு மரத்தில் ஏறியிருந்து பார்த்தபோது பயங்கர ஆயுதங்களுடன் வந்த கோஷ்டியினர், எனது மனைவியையும், மூத்தமகளையும் வெட்டிக் கொன்றார்கள். அவர்கள் சென்றபின் கீழே வந்து பார்த்த போது தோட்ட லயத்தில் மற்றும் 5 சடலங்கள் இரத்த வெள்ளத்தில்காணப்பட்டன''

மலைநாட்டிலிருந்து கலவரத்தினால் பாதிக்கப்பட்டு யாழ்ப் பாணம் வந்து 'தந்தைசெல்வா அகதிகள் முகாமில் தஞ்சமடைந்துள்ள பெருமாள் கந்தசாமி (37 வயது) மேற்கண்டவாறு நேற்றுத் தெரிவித்தார்.

இவருடன், இவரது மகள் சாந்தியும் 8 வயது) வந்திருந்தார்.

'நோட்டன் பிறிட்ஜ்' பகுதியிலுள்ள' குமரி தோட்டத்தில் இவர் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார்.

இவர்மனைவிசரோஜா34வயது மகள் சரசு (16 வயது) தந்தை பெருமாள் (60 வயது) தாயார் செல்லம்மா (45 வயது) தோட்டத்தில், இவருடன் இருந்தார்கள். சம்பவம்பற்றி கந்தசாமி கூறியதாவது:

''கடந்த மாதம் 28ம் திகதி பிற்பகல், வாள் கத்தியேன்ற பயங்கர ஆயுதங்களுடன் ஒரு கோஷ்டி வந்து கொண்டிருப்பதாக அறிந்ததும், எல்லோரும் பாதுகாப்புத் தேடி ஓடினார்கள். நான் எனது இளைய மகள் சாந்தியை முதுகில் சுமந்துகொண்டு மரத்தில் ஏறி இருந்து பார்த்தேன்.

''அக்கோஷ்டியினர் என் மனைவி சரோஜாவை துடி துடிக்க வெட்டினார்கள் என் மூத்தமகளை ஓட ஓட துரத்தி வெட்டினார்கள் எங்கும் ஒரே கூக்குரலும், அழுகையுமாக இருந்தது''

கண் விழித்தபடி மறுநாள் அதிகாலை வரை மரத்தை கட்டிப்பிடித்தபடி இருந்தேன். அதிகாலை 5 மணிக்கு கீழே இறங்கி வந்து பார்த்தபோது என் மனைவியும், மகளும் இரத்த வெள்ளத்தில், வெட்டுக்காயங்களுடன் இறந்து கிடந்தார்கள் அங்கு வேறு 5 பேரின் சடலங்களும் காணப்பட்டன.

''எனது தந்தையும், தாயும் பாதுகாப்பிற்காக, வேறு

(6-ம் பக்கம் பார்க்க)

விமானப் பீதி

(வவனியா)

வவனியா தச்சன்குளம் ஆயுதப்படை தலைமை அலுவலகத்திற்கு அடிக்கடி இரு சிறிய புதிய விமானங்கள் வந்துபோகின்றன. இவை இரண்டும் ஒன்றன் பின ஒன்றுக வந்து போவதைக்காணமுடிகிறன.

சில வேளைகளில் ஹெலிக் கொப்டர்கள் தாழப் பறந்து செல்வதனல் பதட்டம் நிலவுகின்றது.

சிறந்த தம்பதி!!

(லண்டன்)

லண்டனில் நடாத்தப்பட்ட சிறந்த தம்பதிகள் மதிப்பீட்டில் இம்முறையும் அமெரிக்க ஜனதிபதி ரொனல்ட் றீகனும் அவரது மனைவி நான்ஸியுமே தெரிவாகியுள்ளனர்.

உலகிலேயே மூன்று தடவைகள் தெரிவாகிய தம்பதிகள் இவர்கள் தான்.

இதனைவிட கணவனை விட அதிக செல்வாக்கு நான்ஸிக்கு இருப்பதாக வெள்ளைமாளிகைப் பேச்சாளர் தகவல் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி வாக்கு

நீ எதை வேண்டுகிறாய் என்பதைத் தூர வைத்து விட்டு இறைவன் எதைவேண்டுகிறான் என்பதை அறிய விரும்ப வேண்டும்.

—ஸ்ரீ அரவிந்தர்

நமது நோக்கு

'பொருந்துவன போமினென்றுற் போகா'

வடக்கிலும் கிழக்கிலும் 'பயங்கரவாதத்தை' ஒழிக்க இராணுவ முகாம்கள் அவசியமென்பதையும் அவற்றைப் பாதுகாக்க ஆயிரம்மீற்றர் பாதுகாப்பு வலயத்தைவிட வேறுவழியில்லையென்றும் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருக்கிறார்.

அதனால் பொதுமக்கள் கொல்லப்படும்அபாயத்தை எவ்வாறு நீக்கலாமென்று எங்கள் நிருபர் கேட்ட போது, ''வேறுவழியில்லை; இருந்தாற்சொல்லுங்கள்?'' என்ற கோரிக்கையையும் ஒரு சவாலாக விட்டிருக்கிறார்.

பிரதமரின் பத்துலட்சம் வீட்டுத்திட்டத்துக்கு எதிர்மறையான செயலே இராணுவத்தினரின் நீவைப்பு; எத்தனை ஆயிரம் வீடுகள்-குடிசைகளாக இருக்கலாம்-எரிக்கப்பட்டன; எத்தனை ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டனர், காயப்பட்டனர், அகதிகளாக முகாம்களில் மரணவேதனையில் காலங்கழிக்கின்றனர்?இந்த விபரங்கள் இன்று வெளிவராவிட்டாலும்,ஒருகாலம் புனித புள்ளிகளில் வெளிவரும்.

இன்றைய நிலையில் பத்துலட்சம் கையெழுத்துக்கள் பாதுகாப்பு அமைச்சரின் திட்டத்தை மாற்றியமைக்குமா? வலயங்களை உடனடியாக நீக்குங்கள்; இனப் பிரச்னைக்குத் தீர்வு காணுங்கள் என்பதே வெகுஜன இயக்கத்தின் வேண்டுகோள்.

இதற்கு ஒரு குறிப்பிட்ட ஆலோசனை வழங்க இத்தகைய பாரிய இயக்கம்முன்வரமாட்டாதென்பது தெரிந்ததே. எவ்விதபேதங்களையும் மறந்து மனிதஉயிர் மட்டுமல்ல, எல்லா உயிர்களும்,உடைமைகளும் காப்பாற்றப்பட வேண்டுமென்பதே அரசுக்கு விடப்பட்ட கோரிக்கை.

காப்பாற்றும் கடமையை முற்றுகத் துறந்துவிட்ட ஆட்சியென்றால்;இத்தகைய கோரிக்கை பலனளிக்காது.

யாழ்ப்பாணத்தில் சுதந்திரதினத்தன்று தேசியக் கொடி பறக்க முடியவில்லை என்பதால் ஆட்சி முடிவடைந்ததென்று நாம் கொள்ளவில்லை. சிங்கக் கொடி, தேசியக் கொடியானால் அது நாட்டில் எங்கும், காற்றில்லாத போதும் நிச்சயம் பறக்கும்.

இன்று கொடியைப் பற்றிய பிரச்னை எழத் தேவையில்லை. நிலைமை நோர்மல் இல்லாவிட்டால் சில நிகழ்ச்சிகள் தடைப்படுவது இயற்கை.

நிலைமையைச் சுமுகமாக்க அல்லற்படும் ஆட்சிக்கு மக்கள் உதவ வேண்டும். மக்களின் உயிரைப் பணயம் வைத்து, இராணுவத்தைப் பாதுகாக்கும் நிலைமை மிக மோசமானது.

இதனை எவ்வாறு சமாளிப்பது? இலங்கை இராணுவமே இன்று தமிழ்ப்போராளிகளுக்கு அலெர்ஜியாகவிருக்கின்றது. இரு பகுதியினரையும்; ஒருவரை ஒருவர் சந்திக்காதுசெய்வதே தவிர்க்கமுடியாத பரிகாரம்.

எங்கள் நிருபருக்காக நாம் சொல்கிறோம்; இராணுவத்தைத் தற்காலிகமாகவாவது இருப்பிடத்துக்கு அழையுங்கள். அதற்கொரு நிபந்தனையாகத் தமிழ்ப் போரரளிகள் எவ்வித தாக்குதலிலும் ஈடுபடா திருப்பதை இந்தியா பொறுப்பேற்கட்டும்.

இந்தியாவின் உதவியை நாம் நாடாதிருக்க முடியாது. போரை நிறுத்த மத்தியஸ்தம் வகிக்கும் இந்தியா பொறுப்பெடுத்தால், இன்று வடக்கிலும் கிழக்கிலும் இடைவிடாது தொடரும் அழிவுகள் தொப்பென நிறுத்தப்படும். இந்த முடிவுக்குத் தமிழ்ப் போராளிகள் நிச்சயம் ஒத்துவர வேண்டும். இலங்கை அரசில் தமிழ்மக்கள் மட்டுமல்ல, இந்தியாவும் அவநம்பிக்கைகொள்ள இடமிருந்த போதும், இன்னொரு 'ஆட்டம்' இதனை பரீட்சிப்பது அவசரமாகிறது.

பகைமை மாற எத்தனை காலம் எடுத்தாலும், அரசியல் முடிவு அவசியமென்பதால் அதனை அலட்சியம் செய்யும் அரசையோ,போராளிகளையோ மக்கள் ஆதரிக்க மாட்டார்கள்.

வடக்கும் கிழக்கும் இணைவதோ இல்லையோ என்ற கேள்வி, ஒரு நியாயமான தீர்வுக்குத் தடையாக இருக்கத் தேவையில்லை. அதனை ஒரு முக்கிய கேள்வியாகப் பிடிவாதங் கொண்டால் முடிவு எட்டத் திலென்பதும், இந்தப் ''போர்'' தொடரின், தீய அரசியல் சக்திகளுக்கு இடமுண்டென்பதையும் இரு பகுதியினரும் உணர வேண்டிய காலம் வந்திருக்கிறது.

தெளிந்த கொள்கையும் திறந்த மனமும் உண்டானால், தமிழ் மக்கள் பாதுகாப்புக்குரிய 'தமிழ் மாநிலம்'- ஒன்றே இரண்டோ உதயமாகும்.அதனை மறுக்க மக்கள் சக்தி அனுமதிக்காது. அரசியல், சூழ்ச்சி மக்கள் தலையெழுத்தை மாற்றவல்லதல்ல.

இதனை விளக்கவே கையெழுத்து இயக்கம் ஆரம்பமானது. இதனை அனுதாபத்துடன் அணுகுவதில் எவ்வித அகௌரவமும் இருக்கமாட்டாது.

★ உலக அரசியல் அரங்கு அரசியல் அவதானி

இரவல் புடைவையில் அமைந்த கொய்யகம் இறுதியில் குலைந்தே தீரும்

உழுத்துபோன பிலிப்பைன்ஸ் முதலாளித்துவத்துக்கு அமெரிக்கா முண்டு கொடுக்குமா?

மார்க்கோஸ் தோல்வி புதிய ஆட்சியைத் தடைப்படுத்துமா?

மணிலா

இருபது வருடம் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாக ஆட்சிபுரிந்த மார்க்கோஸும், அவருடைய குடும்பத்தினரும் தேர்தலின் முடிவை எவ்வாறு ஏற்றுக்கொள்வார்கள்? இப்பிரசுரம் வெளியாகுமுன் நிலைமை தெரிந்துவிடும். முடிவு என்னவானாலும் நாட்டை இன்றைய கீழ் நிலைக்குக் கொண்டுவர உதவிய ஆருயிர் நண்பன் அமெரிக்கா, மார்க்கோஸை நட்டாற்றில் தவிக்கவிட்டது மறக்கமுடியாத அரசியல் பாடமாகும்.

நாட்டின் இன்றைய வெளி நாட்டுக்கடன் இருபத்தேழு மில்லியன் டொலர்-இரண்டாயிரத்து எழுநூறு கோடிடொலர். பெரும்பாலும் அமெரிக்காவிடமும், அமெரிக்க செல்வாக்குடைய சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்தும் திரட்டிய நிதி மக்கள் நலனிக்குச் சுவறியிருந்தால் ஜனாதிபதியை அசைக்க இயலாத நிலையில் அமெரிக்கா அவருடைய ஆட்சி தொடரத் தன்னாலியன்றதெல்லாம் செய்திருக்கும்.

அமெரிக்க வற்புறுத்தல்

இன்று மாஷல்-லோவில் ஆட்சி புரிந்த மார்க்கோஸ் பொதுத்தேர்தலை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் பெரும்பாலும் அமெரிக்க நெருக்குதலால் நடைபெற்றது. மக்கள் விசுவாசத்தை இழந்த ஆட்சி மட்டுமல்ல, ஜனநாயகமரபை உதாசீனம் செய்த கொடுங்கோல்; ஒரு சில புதுப்பணம் படைத்த செல்வர்களுக்கே சார்பாக இருந்தது.

எதிர்க்கட்சித் தலைவர் அக்குவினோ கொலை செய்யப்பட்டதும், அக்கொலைக்குக் காரணமாயிருந்தார் என்று பகிரங்கமாக நம்பப்படும் ஜெனரல் வெர் அவருடைய நெருங்கிய உறவினர் என்பதும், அக்குவினோவின் கொலை வழக்கில் அளித்த தீர்ப்பை மக்கள் ஏற்காதிருந்ததும் அவருடைய மனைவி திருமதி அக்குவினோ நாடளாவிய ஆதரவுடன் போட்டியிடக் காரணமாக விருந்தது.

தேர்தலைப் பின்போட, தேர்தலில் மோசடி செய்ய. தேர்தலின் தீர்ப்பை மழுப்ப எல்லாவிதமான அட்டாதுட்டித் தனங்களுக்கும் உடந்தையாக இருந்தார் மார்க்கோஸ் என்பதை அமெரிக்கா முற்றுக நம்பியதால், எவ்வகையிலும் அவரின் ஆட்சி முடிவடையவேண்டுமென்று தீர்மானித்துவிட்டது.

கேந்திரஸ்தானம்

ஆசியாக் கண்டத்தில் பிலிப்பைன்ஸ் ஒரு அழகான ஆனால் அமைதி தேடாத நாடாக இருந்துவருகிறது. செல்வம் கொழிக்க உதவும் இயற்கை வளம் இருந்தபோதும் சுதந்திரமாக மக்கள் வாழ, வழி கிடைக்கவில்லை. 19 ம் நூற்றாண்டு இறுதியில் ஸ்பெயினுக்குக் குடியேற்ற நாடாக இருந்த பிலிம்பைன்ஸை அமெரிக்காவுடன் போராடித் தோற்றபோது இந்தநாட்டை இருபது மில்லியன் (இரண்டு கோடி) டொலருக்கு அமெரிக்காவுக்குக் கையளித்தது அன்று தொடக்கம் இன்று வரைக்கும் பிலிப்பைன்ஸ் அமெரிக்காவின் ஆதிக்கத்தில்இருந்துவருகிறது.

கத்தோலிக்க நாடு

ஆசியாவில்உள்ளஒரேஒருகத் (5-ம் பக்கம் பாக)

தென்கிழக்கு, தெற்குஆசியப் பிராந்தியங்களில் அரசியல் காற்று மாற்றம்?

புதிய ஆட்சி

கொலையுண்ட எதிர்க்கட்சித்தலைவரின் விதவை திருமதி. கொரஸோ அக்குவினோ அரசியலுக்குப் புதிதாக இருக்கலாம்; ஆனால் மக்கள் ஆதரவும் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பும், நாட்டைத் தளப்பமில்லாது வழிநடத்த, ஒரு மிதவாதப்போக்கில் அவரை நிறுத்தச் செய்யும். இப்புதிய ஆட்சித் தலைமை; அமெரிக்கச் செல்வாக்கு, அமெரிக்க இராணுவத் தளங்கள் போன்ற விடயத்தில் தீவிரமாற்றம் எதையும் செய்ய முற்படாது எனத்தெரிகிறது.

தென் கிழக்கு ஆசியா

1965 - 70 காலத்தில் வியட்நாம், அமெரிக்காவுக்குப் பெருந்தலையிடாக இருந்தது. இக்காலத்தில் பிலிப்பைன்ஸில் மார்க்கோஸ், அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனுக்கு பலத்த வலது கரமாக இருந்தார். வியட்நாம் போய்விட்டது, இன்று ஜனாதிபதி நீகன்; பிலிப்பையின்ஸில் புதிய ஆட்சியே விரும்புகிறார். அரசியல் காலத்தின் கோலம் இருந்தவாறென்னே.

தெற்காசியா

தென்கிழக்கு-ஆசியாவை ஒருபோதும் கைவிடுவதில்லை என்ற கொள்கையுடைய அமெரிக்கா, அதன் உதவிகொண்டு போலி முதலாளித்துவ ஆட்சி நடத்தும் நாடுகளை அவதானித்து வருகிறது.

பொருளாதாரம் குன்றினாலும் இப்பிராந்திய நாடுகளில் அமெரிக்காவுக்கு ஆதரவு உண்டென்றால் அவற்றைத் தொடர்ந்து ஆதரிக்க நீகன் ஆட்சி தயங்காது.

இன்று சார்க் (Saarc) என்ற தெற்காசிய நாடுகள் நிறுவன ஏழு நாடுகளும் ஒற்றுமைப்படுத்தத் தத்தம் பொருளாதார, அரசியல் ஸ்திரத்தை நிலைநாட்ட முன்வந்திருக்கின்றன.

மாலைதீவு

இன்று மாலைதீவுக்கு விஜயம் செய்திருக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி அதன் ஒத்துழைப்பு, இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அவசியமென்பதை வற்புறுத்தியிருக்கிறார். மிகச்சிறிய நாடானாலும்; இந்துசமுத்திரம் ஓர் அமைதி நீர்பரப்பாக அமைவதற்கு மாலைதீவின் ஆதரவு ஏனைய நாடுகளைப்போலமிக அவசியமென்பதையும் வற்புறுத்தியிருக்கிறார்.

இலங்கை விடயமும் அங்கு போசப்பட்டதால், சார்க் நிறுவனம், தமிழர்பிரச்னையில் எங்களைக் கைவிடுமென அஞ்சதேவையில்லை.

வாஷிங்டன்

பெரிய இந்தியப்பிரதமர்; சிறிய மாலைதீவில். சிறிய இந்திய அமைச்சர்; பெரிய அமெரிக்காவில். இந்த இடங்களிலும் இலங்கைப் பிரச்னை பேசப்படுகிறது. ''இராணுவத் தீர்வு என்று அடிக்கடி சொல்லிவரும் இலங்கை அதிகாரிகள் ஒரு அரசியல் தீர்வுக்குத் தடைபோடுகின்றனர்'' என்கிறார் இந்திய வெளியுறவு அமைச்சர் பஹத்அமெரிக்கா இதில் தலையிடாது. இந்தியாவின் முயற்சிகளுக்கு அது ஆதரவு அளிக்கும். இது எவ்வாறு என்பதை இருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி ஜே ஆர் மீண்டும் இந்தியாவின் 'தயவை' நாடுகிறது ஒரு நளினமா? நனினத்துக்கும் ஒரு எல்லை உண்டு.

(5-ம் பக்கம் பார்க்க)

கந்தகோட்டத்தருகே கம்பன் தமிழ்க்கோட்டம்!

உருப்பளிங்கு போல்வாள் உறையும் திருவகமே
அருட்பொலிவை ஆக்கும் அறிவகமாம் ஆலயமே
கருத்தொளிரும் கம்பன் கழகமதின் கண்ணகமே
விருப்புடனே நாட்டுமுயர் கம்பன்தமிழ்க்
கோட்டமதே!

நம்பொன் கலையகமே நாவரசி நல்லகமே
கம்பன் கழகமதின் கன்னித் தமிழகமே
அம்பொன் அருளகமே ஆனந்த ஆய்வகமே
தெம்பின் திருவகமே தேசுநிறை கோட்டமதே!

காட்சிநிறை நல்லூரில் கந்தன் கருவூலம்
ஆட்சிநெறி யாளரினால் அன்பளிப்புச் செய்தவுயர்
மாட்சிநிறை காணிநிலம் மாநகர ஆணையாளர்
சாட்சியுற வாய்ந்தவுயர் தண்டமிழார்
கோட்டமதே!

கனிந்தித் தமிழ்வளர்க்கும் காதலார் கோட்டமதே
முன்னைப் பழம்பொருளார் மூச்சின் முறைதலமே
பின்னைப் புதுமையையும் பேச்சும் பெருந்தலமே
பொன்னிக் கடியான் புகழ்பூக்கும் கோட்டமதே

கந்தகோட் டத்தருகே கம்பன் தமிழ்க்கோட்டம்
நந்தகுமார் நற்ஜெயராஜ் நாடும் குமாரதாசர்
சிந்தனையின் சீரும் சிவஞானம் சேர்செயலும்
வந்தவுயர் கம்பன் தமிழ்க்கோட்டம் வாழியவே!

—அரியாலையூர் வே. ஐயாத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்டர் சைக்கிள்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள மோட்டார் சைக்கிள் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

இதே நேரத்தில் கொழும்பு புத்துறையில் துப்பாக்கி முனையில் எஸ். யோகராசா என்பவரின் மோட்டார் சைக்கிள் ஒன்று வீட்டிலிருந்து கடத்தப்பட்டுள்ளது. (க)

இரவல் புடவையில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தோலிக்க நாடு இது. 83 சத வீத மக்கள் கத்தோலிக்கமதத்தினர். அமெரிக்கத் தொடர்பால் நாட்டின் கலை, கலாசாரம், நடை உடை பாவனை அனைத்தும் இது ஒரு குட்டி அமெரிக்க நாடு என்ற வகையில்தோற்றமளித்துவருகிறது.

அமெரிக்காவுக்கு எதிராகக் கிளம்பிய பிலிப்பைன்ஸ் கெரில்லா யுத்தம் அடக்கப்படுவதற்கு ஆறு வருடங்கள் சென்றன. அது இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் நடந்த போராட்டம். இன்று சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் அமெரிக்காவே பிலிப்பைன்ஸின் காவலாளர் எனலாம். 1946 ல் சுதந்திரம் அடைந்த சில ஆண்டுகளில் மீண்டும் ஒரு கெரில்லா யுத்தம் நடந்தது அதனை அமெரிக்கா நசுக்க வில்லை. மிகத்தந்திரமாக, மக்களுக்கு மிகப்பிடித்தமான ஒரு கவர்னர் பின்பு ஜனதிபதி-றேமன் மக்சேசே என்பவரின் தலைமையில் புரட்சி நீக்கப்பட்டு நாடு செவ்வனே பரிபாலிக்கப்பட்டு வந்தது.

சர்வதேசப் புகழ்பெற்ற றேமன் மக்சேசே அகாலமரணமடைதந்பின்வந்தவரே மார்க்கோஸ். இவர் தொடக்கத்தில் நாட்டை வளம்படுத்தப் பல திட்டங்களைத் தீட்டியபோதும் பின்பு அவருக்கு என்றும் விசுவாசமாக இருந்த கத்தோலிக்க மக்கள் வெறுப்படையும் வகையில் நாட்டின் செல்வத்தையும் நிதிஉதவியையும் துஷ்பிரயோகம் செய்தார்.

அமெரிக்காவின் தர்மசங்கடம்

கம்மியூனிஸ்ட் தாக்குதலை ஒரு சாட்டாக வைத்து அமெரிக்க உதவியில் உருசிகண்டவர் மக்களாட்சிக்கு மண்போடுகிறார் என்பதை உணர்ந்தஅமெரிக்கா, இந்தப் பொதுத்தேர்தலைக் கட்டாயப்படுத்தியமையால் அமெரிக்கா மீது அவர் வெறுப்புக் கொண்டிருக்கிறார்.

தமது உறவினர் ஜெனரல் வெர் என்பவரை அகற்றுவதாகச் செல்லியிருந்தும், அவ்வாறு செய்யவில்லை. என்பது மக்கள் அனைவருக்கும் ஏமாற்றமும் ஆத்திரமும் ஏற்படுத்தி இருந்தது.

மக்கள் வெறுப்புக் கொண்ட ஆட்சிக்கு அமெரிக்கா முண்டு கொடுக்கமாட்டா தென்பது தெளிவு. பொருளாதார ரீதியிலும் பார்க்க, தென்கிழக்கு ஆசியாவின் கேந்திரஸ்தானமானது பிலிபைன்ஸ்என்பதால்அந்த நாட்டைத்தன் வசப்படுத்துவதே அமெரிக்க நோக்கம். இதனால் தேர்தலில் வெற்றி பெறும் கட்சிக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும்.

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30,
சிவகுமார் — அம்பிகா
கண்மணியே பேசு

லிடோ சினிமா
10-30, 2-30, 6-30
கார்த்திக்—ராதா
நடித்த
அலைகள் ஓய்வதில்லை

வெலிங்டன்
10-30, 2-30, 6-30
முத்துராமன், ஜெயசித்திரா
ஸ்ரீகாந், வி.கே.இராமசாமி
நடித்த
இன்ஸ்பெக்டர்மனைவி
(புதிய பிரதி)
14-2-86 முதல்
THE BRIDGE TWO FAR

பிரார்த்தனை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நேற்று நடந்த வடபிரதேச தொழிற்சங்கக் கூட்டுக் குழுவின் கூட்டத்தில், 13 தெழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி இக்கூட்டுக் குழு சார்பில் பிரதிநிதி ஒருவர் பிரார்த்தனைக்குழு ஏற்பாட்டாளர்களுடன் இன்று பேச்சு நடத்தவிருக்கின்றார். [க]

உருக்குலைந்த---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட முடியாத போதிலும், இவை தவசிக்குளம் பகுதியைச் சேர்ந்த இரு விவசாயிகளது சடலமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை இவ்விடத்தில் நிகழ்ந்த கண்ணிவெடிச் சம்பவத்தையடுத்து இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் ஸ்தலத்திலேயே பலியானது தெரிந்ததே.

அமைச்சர்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைப்பில் அமைச்சர் பேசுவதாக இருந்தது.

''கொந்தளிக்கும் ஒரு தீவு'' என்ற மகுடத்தின்கீழ் நடைபெறும் மேற்படிகருத்தரங்கில் கலாநிதி நீலன் திருச்செல்வம் 'ஒரு பல்லின நாட்டில் தமிழ் தேசியவாதம்' என்ற தலைப்பிலும், 'தமிழர்களின் அச்சங்களும் அபிலாஷைகளும்' என்ற தலைப்பில் திரு. எம். சிவசிதம்பரமும், 'இலங்கையும் அதன் எதிர்காலமும்' என்ற தலைப்பில் பேராசிரியர் ஏ. ஜே. வில்சனும் பேசவுள்ளனர்.

அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சிறந்த பேச்சாளர் என்ற கியாதியைப் பெற்றவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

11 இளம்-.-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமலை பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட இளம் பெண்கள் திருமலை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுவதாகவும் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது. [மா)

கடைசிநேர வரிவிளம்பரம்

விற்பனைக்கு

ந. கனகேஸ்வரி இல. 6, 2ம் ஒழுங்கை, பிறவுண்ரோட், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள வீடும், வளவும், தளபாடங்களும், அத்துடன் பூநகரி செட்டிய குறிச்சியில் உள்ள 5 ஏக்கர் நெற்காணியும் விற்பனைக்குண்டு.

(C 687)

15- திகதிமுதல் வழமையான ரயில் சேவை?

[யாழ்ப்பாணம்]

வடபகுதி ரயில்சேவை இம்மாதம் பதினைந்தாம் திகதி முதல் வழமைக்குத் திரும்பும் எனத் தெரியவருகிறது.

தற்போது 'யாழ். தேவி', 'இன்ரசிற்றி' சேவை மட்டுமே நடைபெற்றுவருகிறது

இம்மாதம் 15ம் திகதிமுதல் இவ்விரு சேவைகளுடன், யாழ்ப்பாணத்திலிருந்து காலை புறப்படும் யாழ். தேவி, இரவு மெயில் ரயில் சேவைகளும் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [க]

லலித் திடீர் விஜயம்

[யாழ்ப்பாணம்]

பலாலி இராணுவமுகாமுக்கு அண்மித்த பகுதிகளில் ஹெலிகொப்டர் விமானம் நேற்றுக் காலை பல தடவைகள் தாழப் பறந்து வட்டமிட்டவண்ணமிருந்தன.

இம்முகாமுக்கு பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்ததாக நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன.]மா]

இருநூறு வன்செயல் சம்பவங்கள்!

[கொழும்பு]

மலையகப்பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்கள் குறித்து விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்வதற்காக விசேட பொலிஸ் பிரிவொன்று இன்று மலையகம் செல்கிறது.

தீவைப்பு, கொள்ளை, தாக்குதல் என்று இருநூறு வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் புறுக்கள் பறக்கவில்லை!

[வத்திக்கான்]

லெபனனில் சமாதானம்நிலைக்க வேண்டுமென்று பரிசுத்த பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் பறக்கவிட்ட இருபுறுக்களும் மேலே பறந்து செல்லாமல் மீண்டும் அதே இடத்தில் வந்து அமர்ந்து விட்டன!

இச்சம்பவம் கடந்த மாதம் வத்திக்கானில் நிகழ்ந்தது.

இச்சம்பவத்தைக் கண்ட பாப்பரசர் மனம் நெகிழ்ந்து நீண்ட பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

(கெ)

இலங்கை...

[1ம் பக்கத் தொடர்ச்சி[

அண்டைய நாடுகளுடனான இந்தியாவினது உறவுகள்பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையில், தம்மத்தியில் தகராறுக்குரியவை எனச் சொல்லக்கூடிய பிரச்னைகள் ஒருசிலவே உள்ளனவென்றும், இதர பல விஷயங்களில் தம்மத்தியில் கருத்தொருமைப்பாடும் நட்புறவும் ஒத்துழைப்பும் இருக்கின்றன என்றும் திரு. ராஜீவ் காந்தி கூறினார்.

நினைக்கப் பிரிந்த பண்பாளர்

''தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு யாரிடமும் இல்லை'' என்ற கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்ந்து காட்டியவரே வீரதிலகம் சரமுவேல் இம்மானுவேல் யோசவ் ஆவார்.

அன்பர் யோசவ் அவர்களுடன் நான் பல்லாண்டு நெருங்கி உரையாடி உறவாடும் பாக்கியம் பெற்றேன். இவர் 2 ம் உலக மகாயுத்தக் காலத்தில் புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வியை முடித்துக்கொண்டு வெளிநாடுகளில் சிறந்த வீரனுக பணிபுரிந்து பின் நம் நாட்டில் இராணுவ அதிகாரியாக இருந்து 13 - 02 - 75ல் ஓய்வு பெற்றார். இவர் சுடுவதற்கு பயிற்சி பெற்றிருந்தும் தன் வாழ்நாளில் ஒரு வரையும் சுடவுமில்லை. அது மட்டுமன்றி நாவினலும் கூட எவரையும் சுடாத மனிதகிலகமாக திகழ்ந்தார்.

ஒளிவழிக் குழுவினரின் பணியை நன்குணர்ந்ததற் போதய மட்டுநகர் ஆயர் அன்புடன் அழைக்கும் மும் மூர்த்திகளில் முதன்மையானவரே வீரதிலகம் யோசவ் இலை மறைகாய் போல இவர் சமூக சமய பணிகளில் கடினமாக உழைத்தார். அரியாலை கிழக்கு அன்னை வேளாங்கண்ணி ஆலய சபையின் தூணத்தலைவர்களில் ஒருவராகவும் யாழ்கண்டிக்குளி சஞ்சுவாம் பங்கிலும் நல்லூர் பங்கிலும் சமய சமூக பணிகளில் பங்குத்தந்தையர்களுக்கு வலது கரமாகவும் செயல் புரிந்தார். கொக்குவில் கிழக்கு புனித சின்னப்பர் ஆலய பொன் விழா மலர் எயலாளராகவும், இன்று அவ்வாலயம் ஒளிமயம் தெறகாரணக்கர்த்தாவாகவும் இவர் நற் ணிபுரிந்தார். வாரந்தோறும் நூறு பேருக்கு, பாதுகாவலன்' விநியோகப்பார். அத்துடன் வின்சென்ற் டீ பால் சபையின் அச்சாணியாகவுமிருந்தார்.

மின்னலல் முழங்காமல் திடீரென நிகழ்ந்த இவரின் மறைவு ஈடுசெய்ய முடியாத பரிழப்பாகும் பிறந்தார், இருந்தார், இறந்தார் என்றிராது தம்மோடு பழகிய வரையும் தன்னை அறிந்தவரையும் ஒவ்வொரு சிந்தையிலும் செயலிலும் தன்னை நினைக்கும் படியாகப் பிரிந்து சென்றுவிட்டார்

ணிக்கு முத்திரை பொறித்த சாமுவல் நல்லம்மா ஆசிரியதம்பதிகள்ஈன்றெடுத்த நன்கு மக்களில் ஒருவரான யோசவ் 31 வது நினைவு தினமான இன்று அவரின் ஆன்மா நித்திய பேரொளி பெற செபிப்போம்.

துரை. ஆரோக்கியதாசன்

திருமலை சம்பவம்

[திருமலை]

திருமலை மாவட்டத்திலுள்ள பாப்பாமலை, செம்பிமலை ஆகிய பகுதிகளில் நேற்றுக் காலை இரு விமானங்கள் குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தின. இக்குண்டு வீச்சினால் பொதுமக்களின் வீடுகள் சேதமடைந்ததாகவும், உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

[மா]

மட்டக்களப்பு சம்பவம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு - கல்லடியில் இரு சைக்கிள்களில் சென்ற மூவரை 'கொமாண்டோ' பொலிசார் கைது செய்ய முயன்றபொழுது ஒருவர் 'சைனட்' அருந்தி மரணமானார். மற்றைய இருவரும் இரு சைக்கிள்களிலும் தப்பியோடி விட்டனர்.

நேற்றுக் காலை 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஒருவர் பலி!

[யாழ்ப்பாணம்]

கைக்குண்டொன்று தவறுதலாக வெடித்ததில் ஒய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பலியானார்

கரவெட்டி கிழக்கில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தின்போது அருகாமையில் நின்றசிலரும் படுகாயமடைந்ததாகவும் கூறப்படுகிறது. [மா]

வில்லிஸ் விவகாரம் பற்றி 'ஈரோஸ்'

(சென்னை)

ஈரோஸ்' இயக்கத்தினுல் தடுத்து வைக்கப்பட்டுள்ள திருமதி பெனிலோப் விஸ்லிஸ் லின் விடுவிப்புக்குள்ள ஒரு தடைகள் தொடர்ந்து நீடிக்குமானுல் அவரை தாங்கள் நீதிவிசாரணைக்குட்படுத்தக் கூடும் என இவ்வியக்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

''நாங்கள் அவரைச் சர்வதேச செஞ்சிலுவைச சங்கத்தினரிடம் கையளிக்கத்தீர்மானித்தோம் ஆயினும் சிறிலாங்கா அரசின் அசட்டையினுலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அசட்டையினுலும் இதுகைகூடவில்லை'' என அப்பேச்சாளர் மேலும் கூறினர். (கெ-செ)

கிளிநொச்சி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

5ம் வாய்க்கால் பார் வீதியால் பூநகரி வீதியைச் சென்றடைந்து பின்னர் டரந்நீனை அடைந்து போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டன.

இச்சம்பவத்தை அடுத்து ஆனையிறவு தடுப்பு முகாமில் பிரயாணிகள் பொலிசாரின் சோதனையின் போது மருவாரியான இராணுவமும் வீதியில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது

பாலம் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து உருவான பதட்டநிலையால் கிளிநொச்சியில் சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டன.

திருக்கேதீச்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நீவு, வவனியாப் பகுதி அகதிள் இருக்கிறார்கள் இதுவரை அரசாங்கத்தினுல் எதுவித உதவியும் வழங்கப்படவில்லை யென தெரியவருகிறது.

மன்னரில் பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல் ஆகிய பகுதிகளில்தான் சில தினங்களுக்கு முன்னர் இராணுவத்தினருக்கும் தமிழ்த் தீவிரவாதிகளுக்குமிடையே மோதல் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. [மானி. நிரு.]

உருக்கமான வேண்டுகோள்

7-2-86 மாலை 6 மணியளவில் எனது கணவராகிய எஸ். சிவகடாட்சம் அவர்களை சகோதரர்களாகிய நீங்கள் அடுத்தநாள் காலையில் கொண்டுவந்து விடுவதாகக் கூட்டிச் சென்றீர்கள். இதுவரை கூட்டிவந்து விடவில்லை. அவர் சுகமில்லாதவர். 4—5 மாதங்களாக மருந்து சாப்பிட்டு வருகிறார். ஆகவே அவரை கூட்டிச் சென்றீரோ, உடனடியாக கூட்டிக் கொண்டுவந்து விடுமாறு மிகத் தயவாகவும் அன்பாகவும் கேட்டுக் கொள்கிறேம்

அவர் சென்ற நாள்தொடக்கம் நானும் பிள்ளைகளும் ஊண் உறக்கமின்றி வாடுகிறேம். எங்கள் பரிதாப நிலையை உணர்ந்து அவரை உடனடியாக கூட்டிக்கொண்டு வந்து விடுமாறு மீண்டும் தயவாகவும் அன்பாகவும் கேட்டுக் கொள்கிறேம்.

இப்படிக்கு,
மனைவி, பிள்ளைகள்.

C 689

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ROCK ENGINEERS & CONTRACTORS
in
WATER SUPPLY and IRRIGATION WORKS

சிறந்த நிலவள ஆராய்ச்சியுடன் 24 மணித்தியாலமும் தொடர்ச்சியாக தண்ணீர் பெறக்கூடியதான குழாய்க்கிணறுகள் குறைந்த நேரத்தில், குறைந்த செலவில், சிறந்த முறையில், உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.

ரொக் என்ஜினியர்ஸ்,
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.
(C 616)

Spoken English &
Book-keeping & Accounts
(London Exams.)
தபால் மூலமும் நேரிலும்
English Short-hand and
Typewriting (London Exam.)
நேரிலும் பயிற்றப்படும்.

IMPERIAL INSTITUTES,
DISPENSARY LANE, MAIN STREET,
ILAVALAI. (C 621)

G.C.E.(O.Level) English
&
N. C. E.
புதிய பிரிவு ஆரம்பம் 15-2-86காலை 8மணிக்கு
(Weekends only)
காலம் 10 மாதங்கள்
முழுக்கட்டணம் 250/-
ஆசிரியர்: பிரபல ஆங்கில விரிவுரையாளர்
கந்தையா நவரேந்திரன்
வகுப்புக்கள் பாதுகாப்பான இடத்தில் நடைபெறும்.

CANTABIA INSTITUTE,
(Shoot of Oxonia, Colombo)
21, Main Street, Jaffna.
T'Phone 24201 A 220

நூலகவியல்
முதல் வருட வகுப்புக்கள்
பங்குனி மாதம் ஆரம்பமாகும்
தகைமை:
க. பொ. த. உயர்தரம் நான்கு பாடங்களும்
(ஒரு பரீட்சையிலல்ல)
சாதாரண தரத்தில் ஆங்கில பாடமும்.
நூலக ஊழியராயின்
இரண்டு வருட அனுபவமும் க பொ. த. உயர்தரத்தில்
மூன்று பாட சித்தியும்
அல்லது
க. பொ. த. சாதாரண தரம் ஆறு பாட சித்தியும்
மூன்று வருட அனுபவமும்.
விண்ணப்பப்படிவங்கள் (8/-)
17-2 86 வரை வழங்கப்படும்.
கா. மாணிக்கவாசகர்,
செயலாளர்,
இலங்கை நூலகச் சங்கம்
177, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(சி 679)

"தமிழ்ப் பகுதியிலிருந்து ராணுவம் வாபஸ் பெறவேண்டும்!"

நவசமசமாஜ கட்சி கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

"மிக மோசமடைந்துள்ள தேசியஇனப்பிரச்னைக்கு இப்போதாயினும் ஒரு அரசியல் தீர்வு காண்பதற்கு இந்த அரசுக்கு விருப்பமும் ஆற்றலும் இருந்தால், தமிழ்ப்பகுதிகளிலிருந்து ஆயுதப்படையினரை வாபஸ்பெறவேண்டும். இப்பிரச்னைக்கு ஒரு தீர்வினைவிரும்பும் சகலஅமைப்புகளும் தமிழ்ப் பகுதிகளிலிருந்து ஆயுதப் படைகளை வாபஸ்பெறும்படியும், இராணுவத் தீர்வென்ற பயனற்ற முயற்சியைக்கைவிடுமாறும் இந்த அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்கு போராட வேண்டும்".

நவசமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர் கலாநிதி விக்கிரமபாகுகருணரத்னவும், அமைப்புச்செயலாளர் வாசுதேவ நாணயக்காரவும்விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு கோரியுள்ளனர்.

"1983 ஜூலை மாதத்தில் சிங்களப்பகுதிகளில் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதன் பின் தமிழ்ப் பகுதிகளிலே கூடப் பெருந்தொகையான தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இன்று கிடைக்கும் தகவல்களின்படி நாலாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் ஆண்கள், பெண்கள் என்ற வித்தியாசமின்றியும், வயது வேறுபாடின்றியும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மறுபுறத்தில் இந்த இலவாத அரசாங்கம் தன்னைப பாதுகாத்துக் கொள்வதற்காக வேலையற்ற சிங்கள இளைஞர்களின் உயிர்களைத் தியாகம் செய்ய வைக்கிறது" என மேற்படி அறிக்கை கூறுகிறது. [மா

சி. கனகரத்தினம்
ஜே. பி. யூ. எம்.
உதவியாளர்: க. கேசவன்
ஜே. பி. யூ. எம்:
சட்டத்தரணிகளும்
பிரசித்த நொத்தாரிசுக்களும்

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல. 84 அ-பிரிவுகள் 524. 532)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்
காலஞ்சென்ற துரைராஜா சிங்கம் மகள் தயாநிதி உரும்பராய் தெற்கு, உரும்பராய். என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில், மரணமெய்தியவர்.
ஜோர்ஜ் டொனல்ட் துரைராசசிங்கம் கைப்பெண் பரிபூரணம்; உரும்பராய் தெற்கு, உரும்பராய்.
மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல.3636/T

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1986ஆம்ஆண்டு பங்குனி மாதம் 14ஆந் நாளன்று முற்பகல்...மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுமுதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
க. நாகேந்திரம்,
(ஒப்பம்)
பதிவாளருக்காக.

என்னால் வரையப்பட்டது.
க. கேசவன்,
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி
(C 552)

41-வது நினைவுதினமும் நன்றி நவிலலும்

ஜெரோம்பிள்ளை அருள்நேசன்



பிறப்பு:
13-01-1955
ஆண்பவன் அழிப்பு:
01-01-1986

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் இருந்து சுடர்விட்ட குலவிளக்கே! எம்மையெல்லாம் ஆழுத்துயரில் ஆழ்த்திவிட்டு புதுவருட தினத்தன்று பூசைப்பலி கண்டு ஒருவருக்கொருவர் சமாதானம் கூறிவிட்டு தேவாலயம்விட்டு வெளியேறிய ஒருசில மணித்துளிகளில் மண்ணுக்காய் உயிர்துறந்தீர். அன்புத்தெய்வமே! உங்கள் நினைவு என்றும் எங்கள் நெஞ்சை விட்டகலாது. உமது ஆத்மா சாந்தியடைய 10-02-86, 8-ம் வாய்க்கால் உருத்திரபுரம் புனித பற்றிமா சிற்றாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றி செபிப்போம்.

இவர் பிரிவால் துயருறும்;
மனைவி: பெனடிக்ரா பிறேமினி அருள்நேசன்,
பிள்ளைகள்: சஜீவி, அன்றூ, ஒஸ்மன். மக்சி,
இவர் ஜெரோம்பிள்ளை தார்சீசியெஸ் இன் அருமைத்தம்பியும், தார்சீசியெஸ் லெஸ்லி ஜயந்தன் (பிரான்ஸ்), ரூஜினி, டட்லிரமேஷ், சாமினி, ஜோயல், ஜெயவதனி ஆகியோரின் சிறிய தந்தையும், திருமதி செல்லமுத்து, திருமதி இராஜதங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.
03-01-86ல் அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்க்கும் உற்றார், உறவினர் யாவர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால்வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரன்,
அண்ணிமார்,
உறவினர்கள்,
சுற்றத்தவர்களும்.

இல. 49
எட்டாம் வாய்க்கால்,
உருத்திரபுரம். C-615

ரூ. 15 லட்சம் பொருட்களுடன் லொறி கடத்தல்

(யாழ்ப்பாணம்)

சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியுள்ள பொருட்களுடன் லொறி ஒன்று கடத்தப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பொழுது, பளைக்கும் சாவகச்சேரிக்கும் மிடையில் வைத்துக் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது [மா]

எனது

[3ம் பக்கத் தொடர்ச்சி]

இடத்திற்கு ஓடி விட்டார்கள். அவர்கள் பற்றிய எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை. மறுநாள் நான் பிள்ளையுடன் கண்டிக்குச்சென்று அங்கிருந்து குருநாகல் போய், மதவாச்சி ஊடாக யாழ்ப்பாணம் வந்தேன்." (க)

சி. கனகரத்தினம்
ஜே பி யூ. எம்.
உதவியாளர்: கனகரத்தினம் கேசவன் ஜே. பி. யூ. எம்.
சட்டத்தரணிகளும்
பிரசித்த நொத்தாரிசுக்களும்.

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல. 84 அ—பிரிவுகள் 524, 532)
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்
யாழ்ப்பாணம், றக்கா வீதி 81ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற டாக்டர் பொன்னம்பலம் சின்னத்தம்பி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில், மரணமெய்தியவர்.
சின்னத்தம்பி நிர்மலநாதன், 81, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.
மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இ. T/3835

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள்எவரும், 1985 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 02ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுமுதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
(ஒப்பம்)
பதிவாளர்.
என்னால் வரையப்பட்டது.
க. கேசவன்,
((ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி.

1985ஆம் ஆண்டு ஆனி மாதம் 14 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
29-01-86

காரணம் காட்டுவதற்கான திகதி 14-02-86 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
க. நாகேந்திரம்
பதிவாளருக்காக.
(C 553)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6-வது பிறந்தநாள் வாழ்த்து

அச்சுவேலியைச் சேர்ந்த விசாகாத்தினம்-செல்வகுலராணி தம்பதிகளின் செல்வப்புதல்வி (நிஷாந்) இன்று 10-2-86 தனது 6-வது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார். நிஷாந்தை அமெரிக்காவிலுள்ள டடா, அச்சுவேலியிலுள்ள தாத்தா, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பா குடும்பம், சுவிஸ்சிலுள்ள நாதன் மாமா ரோகினி அத்தை, சிந்துமச்சாள், அமெரிக்காவிலுள்ள ரஞ்சன் மாமா, வெள்ளவத்தையிலுள்ள மாமா, அத்தை மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் நிஷாந்தை பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

C 686

இன்றைய பலன்

மாதம்- தை
திகதி- 28 (10 - 2 - 1986)
கிழமை- திங்கள்
திதி- பிரதமை
காலை 6-3ன் மேல் துதியை
நக்ஷத்திரம்- சதயம்
பி இ வரை

மேடம்: சகோதரவழியால் மனதில் சஞ்சலம் தோன்றும் உள் வீட்டிலேயே பூசல்கள் உருவாகும். உஷாராக இருக்கவும்.

இடபம்: தகுதியில் முன்னேற்றம் உண்டு. தரமான வாழ்வும் கிட்டும். எதிரிகள் பணிவர். எதிலும் வெற்றியுண்டு.

மிதுனம்: வாய்வுக் கோளாறினால் வேதனைப்படுவீர்கள் உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும் போக்குவரத்தில்அவதானம்வேண்டும்.

கடகம்: இன்பத்தின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும். காதலர்கள் வாழ்க்கையில் தடைகள் விலகும். பெற்றோரின் ஆதரவும் உண்டு.

சிங்கம்: சிறுவிடயத்திற்குக் கூட அதிக ஆத்திரப்படுவீர்கள். வீணான சந்தேகங்களும் தோன்றக்கூடும். சிந்தித்த பின் செயலாற்றவும்.

கன்னி: அறவழிகளை மனம் நாடும். வேதனை கொடுத்த சம்பவம் ஒன்று சமரசமாகத் தீர்க்கப்படலாம். மதிப்பும் உயரும்.

துலாம்: குடும்ப வாழ்க்கை இன்று சமமாக இருக்கும். தூரத்து உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைப்பதற்கு முன்வருவார்கள்.

விருச்சிகம்: வெற்றிப்பாதையில் வீறுநடை போடுவீர்கள் தொழில் துறையும் சிறப்புப் பெறும். எதிர்பாராத வரவும் உண்டு.

தனுசு: வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தியும் கிடைக்கும், கடமையில் ஆர்வம் பிறக்கும் வைத்தியர்களுக்கு வாக்குப்பெருகும்.

மகரம்: இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும் காதல் கணைதாக்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் தென்படும்.

கும்பம்: எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாகலாம். உடல் நலமும் பாதிக்கப்படும்.

மீனம்; ஒளிமயமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு. ஆசிரியர்கள் பாராட்டப்படுவார்கள்.

திருமலை
வே. ரவீந்திரன்

'விழித்திருப்போம்'

(யாழ்ப்பாணம்]

''சித்தாந்தத்தை சுவீகரிக்காமல் அரசியல் அவலங்களின் மத்தியில் தெருவிலே அரசியல்அநாதைகளாக நின்கின்றார்களென்றால் அதனது வேதனையும், தாக்கங்களும் எங்களையே சாரும். ஒடுக்கப்பட்ட எம்மின தலைவிதியை சகல வழிகளிலும் நாமே வென்றெடுக்க வேண்டும்.'' என்று சிற்பி வெளியீடான 'விழித்திருப்போம்' என்ற கைநூலில் 'எங்கள் இளைஞர்கள், என்னும் தலைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைக்கடக்கமான இந்நூலில் 'மக்களே விழித்திருப்போம்' ஈழம் குழப்பவாதிகள், என்ன செய்யவேண்டும், உட்கட்சிப் போராட்டம், மக்களே நீதிபதிகள் என்னும் பல தலைப்புகளில் உள்ளோட்டமான கருத்துக்கள் நிறைந்துள்ளன இந்நூல் வாசகர்களைக் கவரும் என்பதில் ஐயமில்லை.

வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்

பின்வரும் வகையான வெற்றுச்சாக்குகளை விற்பனை செய்வதற்காகக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கொள்வனவு செய்ய விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு 17-02-1986க்கு முன்பாகப் பெறக்கூடியதாக விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பகடித உறையின் மேல்மூலையில் வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரமென குறிப்பிடப்படுதல் வேண்டும். கேள்விப்பத்திரத்துடன் மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா 250/-செலுத்துதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை ரூபா 5/-செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மேற்கொண்டு விபரம் தேவைப்படின் சங்க பொது முகாமையாளருடன்தொடர்பு கொள்ளவும்.

வெற்றுச் சாக்கு விபரம்

1.	மா சாக்கு	724
2.	1½அந்தர் அரிசிச்சாக்கு	437
3.	2 அந்தர் அரிசிச் சாக்கு	207
4.	1 அந்தர் அரிசிச் சாக்கு	109
5.	சீனிச் சாக்கு	211
6.	கற்கண்டு	04
7.	சர்க்கரை	35
8.	நவதானியம்	141
9.	மா. சீனி, உப்பு பை	110
10.	இழக்கம்	522
		2500

பொது முகாமையாளர்,
புலோலி ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.
06-02-1986. A-214

மகஜர் தயார்!

(யாழ்ப்பாணம்)

1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறுமாறு ஜனாதிபதி ஜே ஆர்.ஜெயவர்த்தனாவைக் கோரும் மகஜரில் இது வரை சுமார் 5001 பெற்றோர் கையெழுத்திட்டுள்ளனர்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் பெற்றோர் இம் மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்பவிருக்கின்றார்கள்.

இது வரை இம் மகஜரில் கையெழுத்திடாத பெற்றோர், நாளை திங்கட்கிழமை காலை கல்லூரிக்கு வந்து கையெழுத்து வைக்குமாறு கல்லூரி அதிபர் வேண்டு கோள் விடுத்துள்ளார். (க)

உருக்கமான வேண்டுகோள்

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த எங்கள் மகள் 3-2-86ல் பிற்பகல் 1 மணிக்கு முதலுதவி பயிற்சிக்கு சென்றுவிட்டு பி. ஏ. தம்பி ஒழுங்கையால் வந்துகொண்டிருந்தபோது இனந்தெரியாதவர்களால் டாக்ஸியால் கடத்தப்பட்டு இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. மகளின் பிரிவால் சுகவீனமுற்றிருக்கும் தாயார் மிகுந்த கவலை அடைந்துள்ளார், மனிதாபமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு மிகவும் உருக்கமாக சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு
க. இராமசாமி

A 227

உருக்கமான வேண்டுகோள்

எனது பாவிப்பிலுள்ள 28 Sri 9547 ELF 250 Truck 15-1-86ல் பகல் 12 மணியளவில் கஸ்தூரியார் வீதியில் வைத்து இனம் தெரியாத நபர்களினால் கடத்தி என்னை கைதடியில் இறக்கிவிட்டுப் போனார்கள். இதனால் நானும் எனது 5 பிள்ளைகளும் அன்றாட சாப்பாட்டிற்கே மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. எனவே புனிதமான இயக்கங்கள் இதில் தலையிட்டு இந்த வாகனத்தை மீட்டுத்தருமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

ச. செல்லத்துரை
நவாலி தெற்கு, மானிப்பாய்.

C 683

ACCOUNTANCY COURSES IN NORTH

I. C. M. A. Section A, Section B
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

A. A. T. Prelim, Inter வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

I. D. P. M. Part I, Part II வகுப்புக்கள்
(COMPUTER)
ஆரம்பம்: 10-2-86

I. A. B. ஆரம்பம்: 18-2-86

I. C. M. A. Proffessional II ஆரம்பம்: 15-2-86

Chartered Accountancy: Licenciate & Prelim
ஆரம்பம்: 15-2-86 and 1-3-86

புதிய A. A. T. Prelim week day Classes
ஆரம்பம்: 17-2-86

At

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, ST. PETERS LANE,
HOSPITAL ROAD, JAFFNA.

T. Phone: 24355 (A 226)

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்:
நா. பொன்னுத்துரை,
[மொடேன் பேணிச்சர்]

நிப்பொன் தேவி
பிளாசா கட்டிடம்,
No. 2 G, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
C 678)

★

திறப்புவிழா அழைப்பு

அன்புடை யீர், 10-2-1986 திங்கட்கிழமை காலை 7 மணியளவில் வரும் சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரான்லி வீதி- கஸ்தூரியார்வீதிச் சந்தியில் அமைந்திருக்கும்

நிப்பொன் - ரேலி - ரவல்ஸ்

திறப்புவிழா நிகழ்த்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

"சைவப்பெரியாரின் வாழ்க்கை எமக்கு ஒரு வழிகாட்டி!"

[வண்ணார்பண்ணை]

"பரந்த மனப்பான்மையுடனும் பாரபட்சமற்ற நோக்குடனும் வாழ்ந்து பண்புநெறியை வெளிப்படுத்திய சைவப் பெரியார் நீதியரசர் அமரர் சிவசுப்பிரமணியம் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம். அவரது சேவை உணர்வுகள் எம்மத்தியில் வாழும் பெருமக்களுக்கு வழிகாட்டலாக அமைகிறது".

இவ்வாறு முன்னாள் பிரதம நீதியரசரும், நாவலர் சபையின் முன்னாள் தலைவருமான அமரர் வீ. சிவசுப்பிரமணியத்தின் அஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமைதாங்கி உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்நாவலர் கலாச்சாரமண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற இக்கூட்டத்தில் சைவப்பெரியார்கள், நீதியரசர்கள், சட்டத்தரணிகள் பலர் கலந்து கொண்டனர். சிவசுப்பிரமணியம் அவர்களது நினைவுமலர் ஒன்றும் நாவலர் சபையினால் இக்கூட்டத்தில் வெளியிடப்பட்டது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு. எஸ்.கனகரத்தினம் இம்மலருக்கான வெளியீட்டுரையை நிகழ்த்தினார். நல்லை ஆதீன சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கி மலரைப் பெற்றார். இதைத் தொடர்ந்து புலவர் சிவபாத சுந்தரனார்; பேராசிரியர் கு நேசையா சட்டத்தரணி எஸ் ஆர். கனகநாயகம், 'ஈழநாடு' பிரதம ஆசிரியர் திரு. என் சபாரத்தினம், ஆசிரியர் க. சிவராமலிங்கம், பேராசிரியர் சண்முகதாஸ் பணிஅபிவிருத்திச்சபையின் சார்பில் அதன் தலைவர் திரு. க. நடராசா ஆகியோர் உரையாற்றினர்.

1972-ல் அமரர் வீ. சிவசுப்பிரமணியம் பணிஅபிவிருத்திச் சபையை உருவாக்குவதற்கு அரசுக்குக்கொடுத்த அறிக்கையின் பிரதிகளை பணிஅபிவிருத்திச் சபைத்தலைவரிடமிருந்துயாழ். மாநகரஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் பெற்றார். நாவலர் சபையின் சார்பில் திரு. சோமகாந்தன் நன்றியுரையாற்றினார்.

ஒப்பமிடுமாறு கோரிக்கை

(வண்ணார்பண்ணை)

1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறுமாறு கோரும் மகஜரில் கையொப்பம் இட்டுக்கொள்ளாதவர்களை ஒப்பமிட்டு பூர்த்திசெய்ய உதவுமாறு கோப்பாய் தெற்கு-இருபாலை பிரஜைகள் குழுத்தலைவர் திரு. கே. கனகலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நச்சுக்காய் உண்ட 3 சிறுவர்கள்!

(யாழ்ப்பாணம்)

நஞ்சுக்காய் உண்ட மூன்று சிறுவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்கப்பட்டார்கள்.

அச்சுவேலி தோப்புக்கட்டைச் சேர்ந்த என். உதர்சினி (6 வயது) என். உமாரதி (7 வயது) பி. சுதாகர் (8வயது) ஆகிய சிறுவர்களை இப்பரிதாபரமான நிலைக்குள்ளானவர்களாவர்

இச்சிறுவர்களின் பெற்றோர் வேலைக்கு சென்றபொழுது இச்சிறுவர்கள் மூவரும் நஞ்சுக்காயை உண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சிறுவர்கள் இப்பொழுது அபாயகரமான கட்டத்தை தாண்டிவிட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது (மா)

ஜி. ஸி. ஈ. பரீட்சை முடிவு

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசம்பர் மாதம் நடந்த ஜி ஸி. ஈ. [சாதாரணம்] டீரீட்சை முடிவுகள் இம்மாத முடிவுக்குள் வெளியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

யுவதி சடலம் ஒப்படைப்பு

(வவுனியா)

வவுனியா மகா இறம்பைக்குளம் என்ற இடத்தில் இரவு தொலைக்காட்சிப்படம்பார்த்துவிட்டு உறங்கியவர்களை இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்த போது சுடுபட்டு இறந்த காத்தார் சின்னக்குளம் யுவதி முருகேசு ஜெயலட்சுமியின் மரண விசாரணையை நடத்திய மரணவிசாரணை அதிகாரி மேற்படிமரணம் விபத்துமரணம் எனத்தீர்ப்பு வழங்கினார்.

ஆர். வி. வில்வராஜா ஜேபி மரணவிசாரணையை நடத்தினார். விசாரணையின் போது இறந்தவரின் தாய் முருகேசு லட்சுமி (60வயது) சரஸ்வதி ஆகியோர் சாட்சியமளித்தார்கள் பிரேத பரிசோதனையை டாக்டர் சிறீசாஜேஸ்வரன் நடத்தினார். இவர் தனது மருத்துவ அறிக்கையில்; இறந்தவரின் தலையில் சூட்டுகாயம் காணப்பட்டது, இதனால் ஏற்பட்ட இரத்தப்பெருக்கும், அதிர்ச்சியுமேமரணத்திற்குக்காரணமாகும்என தெரிவித்தார். விசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கிரிக்கெட்:

அவுஸ்திரேலியா சாம்பியன்!

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற 'உலக வெற்றிக கிண்ண' கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா சாம்பியன் கிண்ணத்தை தட்டிக் கொண்டது.

மூன்று நாடுகளிடையே நடைபெற்று வந்த மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில், நேற்றைய ஆட்டத்திலும் அவுஸ்திரேலியா அணி இந்தியாவை ஏழு அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து 187 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அவுஸ்திரேலியாக் கோஷ்டி 3 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 188 ஓட்டங்களைப் பெற்று ஏழு அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்று சாம்பியனானது.

வெற்றி-தோல்வி இல்லை

இலங்கை கிரிக்கெட் அணிக்கும் இங்கிலாந்து 'பி' கிரிக்கெட அணிக்குமிடையில் கடந்த நான்கு நாட்களாக மொறட்டுவாவில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

சென். பற்றிக்ஸ் தோல்வி

யாழ். பல்கலைக் கழகச் கிரிக்கெட் கோஷ்டிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிச கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நேற்று நடைபெற்ற சிநேகபூர்வமான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில், யாழ். பல்கலைக் கழகம் மிகஇலகுவாக வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 39 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. யாழ். பல்கலைக் கழகம் ஒரு விக்கெட் இழப்புக்கு 40 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழையமைதானத்தில் நடைபெற்றது. (வி)

'தமிழர் பிரச்னைக்கு குரல்கொடுக்க சிங்கள முற்போக்கு எழுத்தாளர் தயார்"

[யாழ்ப்பாணம்]

"தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குக் குரல் கொடுப்பதற்குச் சிங்கள முற்போக்கு எழுத்தாளர்கள் தயாராக இருக்கிறார்கள்" என்று யாழ்ப்பாணம் மலேயா-இலங்கையர் சங்கத்தில் நேற்று நடந்த சிங்கள முற்போக்கு எழுத்தாளர் கருத்தரங்கில் பேசிய திரு. டொமினிக் ஜீவா தெரிவித்தார்.

திரு. சோமஸ்கந்தர் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் திரு டொமினிக் ஜீவா மேலும் பேசுகையில்; அண்மையில் நடந்த பிரிவுபசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்ட சிங்கள முற்போக்கு எழுத்தாளர்கள், தமிழ் மக்களின் பிரச்னைக்குக் குரல் கொடுப்பதாகவும் உறுதியளித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

"உலகின் பல நாடுகளில் நடக்கும் கொடுமைகளுக்கெல்லாம் குரல்கொடுக்கும் அதே வேளையில், இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு நடக்கும் கொடுமைகள் எதுவும் புலப்படவில்லையா?" என்று கேள்வி எழுப்பப்பட்டபோது அக்கூட்டத்தில் கலந்துகொண்ட சிங்கள முற்போக்கு எழுத்தாளர்கள், தாங்கள் தமிழ் மக்களின் பிரச்னைக்குக் குரல்கொடுப்பதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்ததாகவும் அவர்கள் கூறினர். [க]

கை, கால் கட்டப்பட்ட நிலையில் கரை ஒதுங்கிய 4 சடலங்கள்!

(மூதூர்)

கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் நான்கு பேரின் சடலங்கள் கடற்கரையில் ஒதுங்கியுள்ளன.

மூதூர்க் கடற்கரையில் மூன்றுசடலங்களும், திருமலைக் கடற்கரையில் ஒரு சடலமும் ஒதுங்கியிருக்கக் காணப்பட்டன.

திருமலைக் கடற்கரையில் ஒதுங்கியிருந்த சடலம் கட்டைபறிச்சானைச் சேர்ந்த தவராசா சிங்கம் [26 வயது] என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர் இளம் குடும்பஸ்தர். மற்றைய மூவரும் இளைஞர்கள்.

ஒரு வாரத்துக்கு முன்னர் இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் உயிருடனேயே கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் இந்த நால்வரும் கடலில் வீசப்பட்டிருக்கலாம் என்றும் திருகோணமலை பிரஜைகள் குழு அச்சம் தெரிவித்துள்ளது. [மா]

உருத்திரபுரம் அரிசி ஆலையில் கொள்ளை!

[கிளிநொச்சி]

உருத்திரபுரத்திலுள்ள அரிசி ஆலை ஒன்றுக்குள் கொள்ளையர்கள் புகுந்து அங்கிருந்தவர்களைக் கடுமையாகத் தாக்கிவிட்டு, ரொக்கப்பணம் உட்பட 25ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்

நேற்றுமுன் தினமிரவு 'பாலமுருகன்' என்றழைக்கப்படும் அரிசி ஆலையிலேயே இக் கொள்ளைச்சம்பவம் இடம் பெற்றது.

இரவு 10-30 மணியளவில் அரிசி ஆலைக்குள் திடீரெனப் புகுந்த நான்கு நபர்கள் அங்கிருந்த கூலிஆட்கள், மனேஜர், கணக்கப்பிள்ளை உட்பட ஆறு பேரையும் துப்பாக்கிமுனையில் பயமுறுத்தி 15 ஆயிரம் ரூபாவையும், அவர்கள் அணிந்திருந்த மோதிரங்கள், கைக்கடிகாரங்கள் மற்றும் உபகரணங்களையும் கொள்ளையடித்தனராம். இக்கொள்ளையை ஆலையிலிருந்தவர்கள் தடுக்கமுயன்றபொழுது கொள்ளையர்களால் பலமாகத் தாக்கப்பட்டதாகச் கூறப்படுகிறது. [மா]

இன்று நடக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

[ஊரெழு]

ஆயிரம்மீற்றர் பாதுகாப்பு வலயச்சட்டம், விமானத்தாக்குதல், மற்றும் ஆயுதப்படையினரின் கெடுபிடிகளால் அப்பாவித்தமிழர்கள் கொல்லப்படுதல், சொத்துக்கள் நாசப்படுத்தப்படுதல்ஆகியவற்றைக் கண்டித்து உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் பொதுக் கூட்டமும் இன்று காலை நடைபெறவுள்ளது.

சுன்னாகம் பிரஜைகள் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் மல்லாகம் பிரஜைகள் குழுவும் ஏனைய பொது ஸ்தாபனங்களும், கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை மல்லாகம் பழம்பிள்ளையார் கோவில் முன்றலிலிருந்து ஆரம்பமாகி, கபங்கேசன்துறை வீதிவழியாகச் செல்லும் இவ்வூர்வலத்துடன் சுன்னாகம் மயிலணிப்பகுதிகளிலிருந்து புறப்படும் ஊர்வலங்களும் கலந்து கொள்ளும். பின்னர் மருதனார்மடத்தை அடைந்ததும் அங்கு பொதுக்கூட்டம்நடைபெறும். [மா]

மூவர் பலி

[பருத்தித்துறை]

பருத்தித்துறையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற துப்பாக்கிச் சமரில், தமது இயக்கத்தைச்சேர்ந்த மூன்று போராளிகள் பலியானதாகவும் இருவர் காயமடைந்ததாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

யேசுதாஸ் [தருமராஜா], தெய்வேந்திரசிகாமணி (முரளி), அருள்ஞானதாஸ் [வேமன்] ஆகியோர் மரணமானவர்கள் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் போது இராணுவமுகாமிலிருந்து ஏவிவிடப்பட்டமோட்டர் 'ஷெல்' குண்டுகள் நகரில் உள்ள பல வீடுகளில் விழுந்து வெடித்ததால் சேதமடைந்தன மருதடியில் இருக்கும் உதவி அரசாங்க அதிபர் ஒருவரின் வீட்டின் முன்புறத்திலும் குண்டுகள் விழுந்துவெடித்தன. (மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

மரண அறிவித்தல்

இராஜரத்தினசர்மா பாக்கியம்மா

இராஜரத்தினசர்மா பாக்கியம்மா 9-02-86 ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர் இராஜரத்தினசர்மாவின் அன்பு மனைவியும், பிரேமகாந்தன், சந்திரகாந்தன், நிர்மலா, பிருந்தா ஆகியோரின் அருமைத் தாயாரும், ஸ்ரீதரக்குருக்கள், 'கந்தாம்பாள், சீதாலக்சுமி ஆகியோரின் மாமியாரும், சுபார்ணசுதன், ஞானசுதன். சுரேஷ்கன்னு, சிவதர்சினி, சதீஸ்கண்ணு ஆகியோரின் பேத்தியுமாவார். ஈமக்கிரியைகள் 11-02-86 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நாரந்தனையில் நடைபெறும்.

ஸ்ரீதரக்குருக்கள் இல்லம்,
தான்தோன்றி ஸ்ரீமனோன்மணி அம்பாள் கோவில்,
நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.

(C 688)

திருமதி மயில்வாகனம் தங்கம்மா

இவர் உரும்பராய் வடக்கு கேசனையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. சி. மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும், சுன்னாகம் நியூலிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு ம. தருமலிங்கம், திருமதி செல்வரத்தினம்-கமலாம்பிகை (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். ஈமக்கிரியைகள் உடுவில் டச்வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, 10-02-86 திங்கள் காலை 10 மணிக்கு பூதவுடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: M. தர்மலிங்கம்,
நியூலிங்கம் ஸ்ரோர்ஸ்

(C 681)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org